Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 16, 2023

திங்கட்கிழமை ஒக்டோபர் 16, 2023 | ஒளி: 09 கதிர் 106 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## இந்திய மீனவர்கள் 13 பேர் கைது




எம்.றொசாந்த்

இலங்கை டற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என்றக் குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல்தரை விவகாரம்



# மீண்டும் வழக்கு

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு: ஜனாதிபதியின் மீது சந்தேகம் கொண்டார்.

வா.கிருஸ்ணா

மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல்தரை கோரிய பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் 31ஆவது நாளாக 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் போராட்ட களத்திற்கு வருகை தந்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினருடன், மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் தி.சரவணபவன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் லோ.தீபாகரன் ஆகியோரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ச்சி P2



# இரண்டும் முக்கியம்

### ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என்கிறார் செந்தில்

மயிலதமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரை காணிகளில் தனியார் ஆக்கிரமிப்புகள் இடம்பெற்றுள்ளதாகக் கடந்த சில மாதங்களாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த பிரச்சினை குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் செயலாளர், ஆளுங்கட்சி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், மகாவலி பணிப்பாளர்கள், பொலிஸ்மா அதிபர் மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பு என்பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும்.

தொடர்ச்சி P2

## “சுபாஸ் விடுதிக்கு வராதீர்கள்”

பு.கஜிந்தன்

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக சுபாஸ் விடுதியில் இயங்கிவந்த யாழ். போதனா வைத்தியசாலையின் அனைத்து கிளினிக்குகளும் திங்கட்கிழமை (16) முதல் வைத்தியசாலையின் உட்புறம் இரு வெவ்வேறு இடங்களில் நடைபெறும் என வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

மருத்துவக் கிளினிக்கில் சிகிச்சை பெற வருபவர்கள் அனைவரும் விக்டோரியா வீதியில் புதிதாகத் திறப்பட்டுள்ள நுழைவாயிலூடாக (இல.9 B) வருகை தந்து வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிளினிக்கில் சிகிச்சை பெற முடியும்.

அதேவேளை, இதய சிகிச்சை கிளினிக்கில் சிகிச்சை பெற வருபவர்கள் விக்டோரியா வீதியில் உள்ள வைத்தியசாலையின் 11ஆம் இலக்க நுழைவாயிலூடாக வருகைதந்து இதய சிகிச்சை கிளினிக்கிற்குச் செல்ல முடியும்.

தொடர்ச்சி P2






## அம்மன் சிலையை அகற்ற இடைக்கால தடை

வி.ரி. சகாதேவராஜா

கல்முனை மாநகரை அடுத்துள்ள நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள அம்மன் சிலையை அங்கிருந்து அகற்றுவதற்கு கல்முனை மாவட்ட நீதிமன்றம் கட்டாணை (Enjoining order) (இடைக்கால தடைஉத்தரவு) விதித்துள்ளது.

தொடர்ச்சி P2

## யாழில் மகிழ்ச்சி: திருமலையில் கவலை

பு.கஜிந்தன், ஹஸ்பர்

பெரும்போக நெல் விதைப்பு காலமானது ஆரம்பித்த நிலையில், மழை பெய்யாமையினால் விவசாயிகள் மிகுந்த கவலையில் காணப்பட்டனர்.

இதனால் விதைப்புகள் பின்தள்ளப்படுமா, விளைச்சல் கிடைக்குமா என்ற அச்சத்தில் விவசாயிகள் காணப்பட்டனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் விதைப்பிற்கு ஏற்ற வகையில் மழை சனிக்கிழமை (14) பெய்துள்ளது.

அந்தவகையில் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ச்சி P2



## “10 வீத கழிவை கைது செய்க”

பு.கஜிந்தன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சந்தைகளில் நடைமுறையில் உள்ள 10 சதவீத கழிவு நடைமுறையினை உடனடியாக நிறுத்தி குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு விவசாய அமைச்சர், பொலிஸாருக்கு பணித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 9 வீட்டுத் திட்டங்களில் 2,918 வீடுகள் உள்ளன

மாலபே, மாகும்புர, பொரலஸ்கமுவ மற்றும் ஒருகொடவத்த வீடமைப்புத் திட்டங்களில் பல வீடுகள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளன. நடுத்தர மற்றும் உயர் நடுத்தர வகுப்பினருக்கான 9 வீட்டுத் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டங்கள் மாகும்புர, மாலபே, பொரலஸ்கமுவ, ஸ்டேடியம்கம, ஒருகொடவத்த கட்டம் 1 மற்றும் 2, பேலியகொட கட்டம் 1 மற்றும் 2, அனுராதபுரம் ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

தொடர்ச்சி P2

## ‘மலையகம் 200‘ ஹட்டன் பிரகடனம் வெளியீடு

எஸ்.சதீஸ்


‘மலையகம் 200’ தேசிய மக்கள் சக்தியின் ஹட்டன் பிரகடனம் வெளியீடு, ஹட்டன் டி.கே.டிபூயூ மண்டபத்தில், ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்றது.

இதில், தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஷாநாயக்க, தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சட்டத்தரணி லால் விஜேயநாயக்க, நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பேராசிரியர் விஜயகுமார்,

தொடர்ச்சி P2



## இடையில் நின்றது மெனிக்கே



மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடை மழைக் காரணமாக, வட்டவளை மற்றும் கலபொடவுக்கு இடையில் பாரிய மரமொன்று தண்டவாளத்தில் விழுந்துள்ளது. இதனால் மலையத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2




# மழையகத்தில் மழை தாண்டவம்



மலையகத்தில் கடந்த பல நாட்களாக பெய்துவரும் அடைமழை, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரிப்பு மற்றும் பனிமூட்டம் ஆகியன காரணமாக மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

மத்திய, தென், மேல், ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால், 2,373 குடும்பங்களைச் சேர்ந்த 8,979 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

27 வீடுகள் முழுமையாகவும் 1,157 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் அந்த நிலையம் அறிவித்துள்ளது,

## மண்மேடு விழுந்ததில் ஐந்து வீடுகளுக்கு சேதம்

6) பி.கேதீஸ்

பொகவந்தலாவை- தெரேசியா தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்பு தொகுதியொன்றில் பின் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (15) மண்மேடு சரிந்து விழுந்ததில் ஐந்து குடியிருப்புக்கள் முற்றாக சேதமடைந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 244 குடும்பங்கள் வெளியேற்றம்

கொஸ்லாந்த- மீரியபெத்த பழைய மண்சரிவு பகுதி மற்றும் அதனை அண்மித்த பிரதேசத்தின் இரு புறங்களிலும் உள்ள 244 குடும்பங்கள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் பிரகாரம் உடனடியாக அவர்களின் வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டதாக ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் கே. ஜே.பிரியங்கிகா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மீண்டும் வழக்கு

பண்ணையாளர்களுடன் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடிய பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

மயிலத்தமடு மாதவணை பிரதேசத்தில் தங்கள் கால்நடைகளைக் கொண்டு சென்று மேய்ச்சற்தரையாகப் பயன்படுத்தும் பண்ணையாளர்கள் 31ஆவது நாளாகவும் இங்குப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்தப் பிரதேசத்திலே வேற்று மாவட்டத்தில் இருந்து ஆட்களைக் கொண்டுவந்து அவர்களுக்குப் பயிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதிகளை அரசாங்கம் முன்னர் செய்து போலவே தற்போதும் செய்து கொண்டிருக்கிறது.

அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கு நாங்கள் பல்வேறு முயற்சிகளைச் செய்து வந்திருக்கின்றோம். ஆனால் எதுவும் கைகூடவில்லை. 2020ஆம் ஆண்டு எங்களால் இது சம்மந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 2021ஆம் ஆண்டு மகாவலி திணைக்களம் அவர்களை அப்புறப்படுத்துவோம் என்ற உறுதிமொழி கொடுத்து அந்த வழக்கு நிறுத்தப்பட்டது.

ஆனால், அந்த உறுதிமொழி தற்போது காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. ஆகையால் நாங்கள் மீண்டும் நீதிமன்றம் சென்று அவர்கள் கொடுத்த உறுதிமொழியை நடைமுறைப்படுத்துவதற்கான மனுவைத் தாக்கல் செய்யவுள்ளோம்.

அதற்கிடையில் ஜனாதிபதியுடன் இது சம்மந்தமாக பல தடவைகள் நாங்கள் பேசினோம். கடந்த சில வாரங்களுக்கு முன்பாக நான் ஜனாதிபதியுடன் சந்தித்து இது தொடர்பாகக் கதைத்த போது எனக்கு முன்பாகவே தனது செயலாளரை அழைத்து உடனடியாக பொலிஸ் அனுப்பி அங்கிருப்பவர்களை அப்புறப்படுத்துமாறு உத்தரவு கொடுத்தார். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஜனாதிபதியின் அந்த சொல்லுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டதோ தெரியவில்லை. அல்லது எனக்கு அவ்வாறு சொல்லிவிட்டு நான் அங்கிருந்து சென்றதன் பின்னர் செயலாளரை அழைத்து ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சொன்னாரோ தெரியவில்லை.

திரும்பவும் ஒரு கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பேசுவார். இயன்றளவு அழுத்தத்தைக் கொடுத்து அரசு இயந்திரத்தின் ஊடாக அங்கிருப்பவர்களை அப்புறப்படுத்தி இந்தக் கால்நடைகளை உடனடியாக அங்கு கொண்டு செல்வதற்கான முயற்சியை திரும்பவும் எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

அது கைகூடுமோ தெரியாது ஆனால் அடுத்த வாரமளவில் நீதிமன்றத்தில் மகாவலி அதிகாரசபை கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு மனுவைத் தாக்கல் செய்ய இருக்கின்றோம்.

## 13 பேர் கைது

நெடுந்தீவு கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் 13 பேரும் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதோடு 3 படகுகளும் கடற்படையினரால் சனிக்கிழமை (14) கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மயிலிட்டி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். குறித்த மீனவர்கள் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# இரண்டும் முக்கியம்

### ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என்கிறார் செந்தில்

இவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும். வெளிமாவட்டங்களில் இருந்து வந்து மட்டக்களப்பு மயிலதமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மாவட்டங்களிலேயே விவசாயம் மேற்கொள்ள மாற்று இடங்களை ஒதுக்குவதற்கு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இவ்வாறு மாற்று இடங்கள் வழங்குவதன் ஊடாக பண்ணையாளர்கள், விவசாயிகள் என இருதரப்பினருடைய பிரச்சினைகளும் முடிவுக்கு வருமென ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் பண்ணையாளர்களின் பிரச்சினைகள் முடிவுக்கு வரும்வரை கால்நடைகளுக்கு உணவுகளை வழங்கத் தேவையான உதவித் தொகைகளை வழங்குமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

## "சுபாஸ் விடுதிக்கு வராதீர்கள்"

இது இதய சிகிச்சை விடுதிக்கு பின்புறம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிகிச்சை நிலையத்தில் நடைபெறும் என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அம்மன் சிலையை அகற்ற இடைக்கால தடை

கரைவாகுப்பற்று இறுதியாக ஆண்ட செல்லையா வன்னிமையின் பெண்வழி சார்பில் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் ஒன்பது பேர் இவ்வழக்கை கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

"கடந்த 400 வருடங்களாக நடைபெற்று வந்த பாரம்பரிய வழிபாட்டு முறைக்கு மாற்றாக நற்பிட்டிமுனை கணேசர் ஆலயத்திலிருந்து அம்மன் சிலையை சேனைக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் ஆலயத்திற்கு கொண்டு சென்று வைப்பதற்கு பதிலாக, பிரதிவாதிகளால் சட்டவிரோதமாக அனுமதியின்றி நற்பிட்டிமுனையில் கட்டப்பட்ட புதிய ஆலயத்திற்கு கொண்டு செல்ல பிரதிவாதிகள் தீர்மானித்துள்ளார்கள்.

இதனால் இரண்டு ஊர்களுக்கும் இடையே சண்டை இடம்பெற்று உயிர் இழப்புகளும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருப்பதால், இதனை தடைசெய்யுமாறு கோரி இந்த வழக்கை சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட குழுவினர் தாக்கல் செய்யப்பட்டது.

கணேசர் ஆலய தலைவர் தம்பிராசா ரவிராஜ் உள்ளிட்ட நான்கு உறுப்பினர்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கினை ஏற்ற கல்முனை மாவட்ட பதில் நீதிபதி ஏ.எம்.எம்.ரியால், இந்த கட்டாணையை வழங்கியுள்ளார் என வழக்கு விசாரணையில் ஆஜராகியிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.ஆர்.எம். கலீல் தெரிவித்தார்.

இந்த வழக்கு பதில் நீதிபதி எ.எம்.ரியால் தலைமையில், வெள்ளிக்கிழமை (13) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது சட்டத்தரணி கலீல், அம்மன் சிலையை வெளியில் எடுக்கின்றபோது, சேனைக்குடியிருப்பு மற்றும் நற்பிட்டிமுனை மக்களிடையே முரண்பாடு ஏற்பட்டு அதுவே கலவரமாக மாறி, உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும். எனவே இதனை தடை செய்யுமாறு கோரி நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

சட்டத்தரணி கலீலின் வாதம், சத்திய கூற்று மற்றும் ஆவணங்களையும் அவதானித்த நீதிபதி, "இடைக்கால தடை உத்தரவு ஒன்று வழங்கப்படும் வரை நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற அம்மன் சிலையானது பிரதிவாதிகளோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களாலோ அல்லது வேறெவராலுமோ அங்கிருந்து அகற்றப்படக்கூடாது என்றும், குறித்த அம்மன் சிலையானது நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசரா ஆலயத்திலேயே இருக்க வேண்டும் எனவும் கட்டளையிட்டார்.

இக்கட்டாணை இன்றிலிருந்து 14 நாட்களுக்கு அதாவது 15ஆம் திகதியில் இருந்து 27ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

நீதிமன்ற கட்டாணையை கட்டுப்பட்டு நடக்க தவறும் பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக தண்டிக்கப்பட நேரிடும் என்றும் மாவட்ட பதில் நீதிபதி நியால் கட்டளையிட்டுள்ளார்.

## யாழில் மகிழ்ச்சி: திருமலையில் கவலை

இந்நிலையில், திருகோணமலை மாவட்டத்தில் சனிக்கிழமை இரவு (14) பெய்த கனமழை காரணமாக தம்பலகாமம்,கிண்ணியா போன்ற பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

தற்போது வயல் விதைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் பலத்த மழை காரணமாக முற்றாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

கிண்ணியா சூரங்கல் கற்குழி உள்ளிட்ட வயல் நிலப்பகுதிகள் மற்றும் தம்பலகாமம் கோயிலடி உள்ளிட்ட பல வயல் நிலங்கள் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகள் வயலை உழுது விதைப்பினை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# 9 வீட்டுத் திட்டங்களில் 2,918 வீடுகள் உள்ளன

இந்த 9 வீட்டுத் திட்டங்களும் 2918 வீடுகளைக் கொண்டவை. இந்த வீட்டுத் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் 2021 இல் தொடங்கப்பட்டன. ஆனால் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பிற காரணங்களால் இந்த வீட்டுத் திட்டங்களின் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் இணைந்து இந்த வீட்டுத்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துகின்றன.

இரண்டு படுக்கையறைகள் கொண்ட வீடு 700 சதுர அடிகளைக் கொண்டது. மூன்று படுக்கையறைகள் கொண்ட வீட்டின் அளவு 900 சதுர அடிகளாகும். நடுத்தர வர்க்கத்தினரின் வருமான நிலைக்கு ஏற்றவாறு இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

## ஹட்டன் பிரகடனம் வெளியீடு

பேரவையின் உறுப்பினர் சரோஜா போல்ராஜ், நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளருமான மஞ்சுல சுரவீர மற்றும் தோட்டத் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஹட்டன் பபிரகடனத்தில் முதல் கையெழுத்தை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஷாநாயக்க இட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன், சட்டத்தரனிகள் என பலரும் கையொப்பம் இட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நின்றது மெனிக்கே

கொழும்பு -கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (15) காலை 8.30 க்கு பதுளையை நோக்கி புறப்பட்டுச் சென்ற உடரட்ட மெனிக்கே கடுகதி ரயில், பிற்பகல் 1 மணியில் இருந்து கலபொட ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மரத்தை வெட்டி அகற்றும் நடவடிக்கை பிற்பகல் 3 மணியளவில் நிறைவுறும் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும், அந்த நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது என்றும் ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## "10 வீத கழிவை கைது செய்க"

வடக்கு மாகாண ஆளுநரினால், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து 10 சதவீத கழிவு அறவிடும் நடைமுறை செயற்படுத்தப்படுகின்றமை தொடர்பில், யாழ். மாவட்ட செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்ற மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக திருநெல்வேலி, மருதனார் மடம், சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் இந்த விவசாயிகளிடம் கழிவு அறவிடும் நடைமுறை இடம்பெற்று வருகின்றது.

குறித்த சந்தைகளில் விவசாயிகள் அச்சுறுத்தப்பட்டு அவர்களிடம் இந்த கழிவு அறவிடப்படுகின்றது. எனவே விவசாயிகள் இது தொடர்பில் முறைபாட்டினை பதிவு செய்வதில் தயக்கம் காட்டுவார்கள்.

பொதுவான தீர்மானமாக பொதுவான முறைப்பாடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

10 சதவீத கழிவு அறவிடும் நடைமுறையினை நிறுத்த கோரிய முறைப்பாட்டினை முன் வைக்கின்றோம். எனவே உடனடியாக தடுத்து நிறுத்துவதோடு குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு பணித்தார்.

# டிஜிட்டலுக்கு உலக வங்கியின் தொழில்நுட்ப ஆதரவு கிடைத்துள்ளது

ஒரு மில்லியனுக்கும் அதிகமான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலம் 2030ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் முன்வைக்கப்பட்ட "டிஜிட்டல் இலங்கைக்கான 2030 மூலோபாய செயல்முறை" உலக வங்கியின் தொடர்ச்சியான தொழில்நுட்ப ஆதரவைப் பெற்றுள்ளது.

இதன்படி, இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் முயற்சியை, இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழில்துறையின் முன்னணி அமைப்பான இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழில்துறை சம்மேளனம், DigiGo வர்த்தக நாமத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான டிஜிடல் பிளேபுக் (Digital Playbook) ஐ அறிமுகப்படுத்தும் நிகழ்வு, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தலைமையில் ஜனாதிபதி ஊடக மையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய இயலுமையுடன் உள்நாட்டு டிஜிட்டல் சேவைகளுக்கு பிரவேசிக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் அனுசரணையுடன் LK Domain Registry நிறுவனத்துடன் இணைந்து இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழில்துறை சம்மேளனத்தின் டிஜிட்டல் சேவைகள் பிரிவின் மூலம் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (SMEs) இலங்கையின் பொருளாதாரத்தில் முன்னணி காரணியாக இருப்பதுடன் நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமார் 52 சதவீதம் பங்களிப்பை வழங்குகின்றது. இந்த நாட்டில் 75 சதவீதத்திற்கும் அதிகமான வர்த்தகத்துறையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உள்ளன. இதில் 20 சதவீதம் ஏற்றுமதித் துறையில் பங்களிப்பு செய்கின்றன.

நவீன தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகங்களை இணைத்து இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்த DigiGo நிகழ்ச்சி மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை டிஜிட்டல் மயமாக்குவதற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட முதலாவது DigiGo நிகழ்ச்சித் திட்டம் ஒக்டோபர் 20ஆம் திகதி காலியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மண்மேடு விழுந்ததில் ஐந்து வீடுகளுக்கு சேதம்

தெரேசியா தோட்டத்திலுள்ள முதலாம் லயன் குடியிருப்பு தொகுதியொன்றில் ஐந்து குடியிருப்புகளின் பின்பகுதியில் இந்த மேடுகள் சரிந்து விழுந்துள்ளன, குடியிருப்புகளின் பின்பகுதியில்தான் சமயலறைகள் அமைந்துள்ளன.

பாதிப்படைந்த குடியிருப்புகளில் வசித்த ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் அத்தோட்டத்தின் மற்றுமொரு பாதுகாப்பான கட்டிடத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும், குடியிருப்புக்களின் மீது வீழ்ந்துள்ள மண்மேடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொகவந்தலாவ தெரேசியா தோட்டத்தின் தோட்ட அதிகாரி இமேஷ் போகவத்த தெரிவித்துள்ளார்.

## பரீட்சார்த்திகள் பஸ்கள் இன்றி அவதி

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை, ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்றது எனினும், ஹலி-எல, திக்வெல கிராமத்தில் இருந்து பரீட்சைக்கு தோற்றுவதற்கு வந்த மாணவர்களுக்கு பஸ்கள் இல்லாததால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

தீகல்ல உடகமவிலிருந்து பதுளை நோக்கி இரண்டு பஸ்கள் பயணத்தை ஆரம்பிக்கும். எனினும், ஞாயிற்றுக்கிழமை (15) ஒரு பஸ் கூட ஓடவில்லை என தீகல்ல உடகம கிராம மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன், கெட்டவல, ஹாலி-எல மற்றும் பதுளை கந்தேகெதர நகரிலுள்ள பரீட்சை நிலையங்களுக்குச் சென்றபோது, புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பமாவதற்கு சற்று நேரமே இருந்தது என்றும் பரீட்சார்த்திகளும் பெற்றோரும் கூறுகின்றனர்.

# 244 குடும்பங்கள் வெளியேற்றம்

கொஸ்லாந்த - மீரியபெத்தவை சேர்ந்த நூற்று நாற்பத்து நான்கு குடும்பங்கள் கொஸ்லந்த தேயிலை தொழிற்சாலைக்கும், மஹகந்தவில் இருபத்தி மூன்று குடும்பங்கள் மல்வண்ண தேயிலை தொழிற்சாலைக்கும், திபுல்கசமுல்லவை கொஸ்லந்த சிங்கள வித்தியாலயத்துக்கும், கொஸ்லந்த தமிழ் வித்தியாலயத்துக்கு 81 குடும்பங்களும் தற்காலிகமாக வெளியேற்றப்பட்டுள்ளதாக பிராந்திய செயலாளர் தெரிவித்தார்.

இரவு வேளைகளில் யானைகள் சுற்றித் திரிவதால், மஹகந்த வத்தை பகுதியில் உள்ள குடும்பங்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துவதில் சிறு தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அனர்த்த நிவாரண அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த முகாம்களில் தற்போது 768 பேர் இருப்பதாக ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் கே.ஏ.ஜே.பிரியங்கிகா மேலும் தெரிவித்தார்.



# நவராத்திரி

இந்து சமயத்தை பின்பற்றுகின்ற மக்களால் வெகு விமர்சையாக அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் ஒன்றாக நவராத்திரி காணப்படுகிறது. நவராத்திரி என்பது “நவ + இராத்திரி” என்பன சேர்ந்தே உருவானது. ஒன்பது இரவுகள் என பொருள் கொள்ளப்படுகிறது. சக்திக்காக அனுஷ்டிக்கப்படும் ஒன்பது இரவுகள் என்பது இதன் பொருளாகும்.

உலகமெங்கும் இந்துக்கள் இதனை பண்டிகையினை போல மகிழ்ச்சியாக கொண்டாடுவார்கள். இக்கட்டுரையில் இதன் வரலாறு அதன் அர்த்தங்கள் சிறப்புகள் போன்றவற்றை நோக்கலாம்.

### நவராத்திரி உருவான கதை

மகிசாசுரன் எனும் அரக்கன் பிரம்ம தேவரிடம் கடும் தவம் புரிந்து தனக்கு யாராலும் அழிவில்லை ஒரு கன்னி பெண்ணால் தான் அழிவு உண்டாகும் எனும் வரம் பெற்றான். இதனால் அவன் தேவர்களை துன்புறுத்த ஆரம்பித்தான்.

இதனால் பாதிக்கப்பட்ட இந்த உலகத்தையும் தேவர்களையும் காக்க “சக்தி” பெண் உருவம் கொண்டு பூமியில் பிறந்தார்.

மகிசாசுரனை வதம் செய்வதற்காக போர் புரிந்த ஒன்பது நாட்களும் நவராத்திரி என்று கொண்டாடப்படுகின்றது என புராணங்களில் கூறப்படுகிறது. பத்தாவது நாள் விஜயதசமி எனவும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்துக்களின் மும்மூர்த்திகள் என அழைக்கப்படும் பிரம்மா, விஷ்ணு, சிவன் எனப்படும் தெய்வங்களினுடைய சக்திகளான சரஸ்வதி, மஹாலக்ஷ்மி, துர்க்கை எனப்படும் சக்திகளுக்காக இந்த விரதம் நோற்கப்படுகிறது.

முதல் மூன்று தினங்களும் வீரத்தை வேண்டி துர்க்கையினையும் அடுத்த மூன்று தினங்களும் செல்வத்தை வேண்டி மகாலக்ஷ்மியினையும் இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதியும் வழிபடுவார்கள்.

இவ்வாறு விரதம் அனுஷ்டித்து மூன்று சக்திகளையும் வழிபடுவதனால் வீரம், கல்வி, செல்வம் என்பன வாழ்வில் கிடைக்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும்.

### தத்துவம்

இந்துக்களின் இந்த நவராத்திரி காலம் சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகிறது. தீமைகளை இந்த உலகில் அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்ற சக்தியை வழிபடுகின்ற காலப்பகுதியாக இதை கருதுகின்றனர்.

அறியாமை மற்றும் துன்பங்கள் நீங்கி வாழ்வில் ஒளி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த நவராத்திரி விழா அனுஷ்டிக்கப்படுகிறது.

அனைத்து இடங்களிலும் சக்தி நிறைந்திருக்கிறாள் என்பதை வெளிக்காட்டும் வகையில் கொலு வைக்கும் நிகழ்வும் இடம்பெறுவதனை காணலாம்.

### தீமையை அழிக்கும் பண்டிகை

மகிசாசுரன் என்ற அரக்கனை அழித்து இந்த உலகத்துக்கு நன்மையை அருளிய சக்தி இந்த உலகத்தில் தமது வாழ்வில் உள்ள கஷ்ரங்கள், துன்பங்கள், நோய்கள் அனைத்தையும் இல்லாது ஒழிப்பார் என்ற நம்பிக்கையில் வழிபாடு இடம் பெறுகிறது.

அலங்கார விளக்குகள், ஆடல்பாடல் கலைகள் என தீயவைகள் நீங்கி மகிழ்ச்சியாக மக்கள் இந்த காலப்பகுதியை கொண்டாடுவார்கள் வட இந்தியாவில் இந்த நவராத்திரி அதிகம் பிரபல்யமாக கொண்டாடப்படுகிறது.

### விழுமியங்கள்

வாழ்க்கைக்கு தேவையான மூன்று முக்கியமான கல்வி, வீரம், செல்வம் என்பனவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும் அப்போது வாழ்வில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற விடயத்தை கற்று தருவதாக உள்ளது.

விரதகாலங்களில் உணவை விடுத்து விரதம் காப்பார்கள் இது பசி என்ற உணர்வின் முக்கியத்துவத்தை மனிதர்களுக்கு உணர்த்துகிறது.

மற்றும் இந்த விரத காலங்களில் வீடுகளை துப்பரவாகவும் கோலங்கள் போட்டு அழகாகவும் வைத்திருப்பர் இது மக்களிடையே ஒரு அழகான வாழ்வியலை உருவாக்குகிறது.

> **அறியாமை மற்றும் துன்பங்கள் நீங்கி வாழ்வில் ஒளி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த நவராத்திரி விழா அனுஷ்டிக்கப்படுகிறது**

### இம்முறை

நவராத்திரி விரதம் ஆண்டு தோறும் அனைவராலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு நவராத்திரி விரதம் ஒக்டோபர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

இதற்கமைய ஒக்டோபர் 23ஆம் திகதி சரஸ்வதி பூஜையும், ஒக்டோபர் 24ஆம் திகதி விஜயதசமி விழாவும் கொண்டாடப்பட உள்ளது.

இந்த நவராத்திரி விழாவை முன்னிட்டு, கோவில்கள், வீடுகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சார்பில், கொலு வைத்து வழிபாடு நடத்தப்படும்.

இந்த நவராத்திரி விரதமானது மக்கள் மனதில் மகிழ்ச்சியினையும் பக்தி உணர்வினையும் விதைப்பதாக இருக்கிறது.

வீடுகளிலும் ஆலயங்களிலும் மக்கள் ஒன்றாக கூடி பக்தி பாடல்களை இசைத்து சக்தியின் மகிமைகளை பேசி மகிழ்ச்சியாக இந்த விரதத்தை அனுஷ்டிப்பார்கள் விதம் விதமாக உணவு பண்டங்களை தயாரித்து ஒற்றுமையாக உண்பார்கள்.

உலகமெங்கும் இந்துக்களை பொறுத்த வரையில் இது ஒரு பண்டிகையாக அனுஷ்டிக்கப்படுவது சிறப்பான விடயமாகும்.

# “மேய்ப்புப் பணியிலிருந்து தவறிவிட முடியாது”

எம்.எப். றிபாஸ்

ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்த வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றார்கள் அந்த மேய்ப்புப் பணியிலிருந்து ஆசிரியர்கள் தவறிவிட முடியாது. ஆனால் இன்று தமது கடமையைச் சரியாகச் செய்கின்ற ஆசிரியர்கள் கூட சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளையும், இன்னல்களையும் எதிர்கொள்கின்றனர் மாணவர்கள் ஆசிரியர்களுடைய வழிப்படுத்தலை உதாசீனம் செய்வதனாலேயே பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன என அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா கூறியுள்ளார்.

அக்கரைப்பற்று ஆயிஷா பாலிகா மகா வித்தியாலயத்தில் பெரா சரிட்டி நிறுவனத்தின் ஏற்பாட்டில் “நற்பிரஜைகளாவோம்” எனும் தொனிப்பொருளான நிகழ்வு, வெள்ளிக்கிழமை (13) நடைபெற்றது. அதில், பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



பாடசாலை அதிபர் ஹாறுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி ஹம்ஸா தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆசிரியர்கள் மாணவர்களை நோக்கி கூறுகின்ற அறிவுரைகளை உள்வாங்காமல் வேறு சூழ்நிலை காரணங்களால் தூண்டப்பட்டு கல்வி நோக்கைவிட்டு வழி தவறிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். இதனால் நல்ல நிலையில் இருக்கின்ற மாணவர்களும் இச்சிக்கலுக்குள் அகப்பட்டுக்கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலை தற்போழுது எழுந்துள்ளது.

மாணவர்கள் கூடுதலான நேரத்தை ஆசிரியர்களுடன் பாடசாலையில் கழிக்கின்றார்கள் அந்த நேரப்பகுதியில் சட்டத்தின் பார்வையில் மாணவர்களின் பராமரிப்பும், கட்டுக்காவலும் ஆசிரியர்களிடத்திலும், அதிபரிடத்திலும் ஒப்படைக்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மீது முழுப்பொறுப்பையும் கொண்டுள்ள ஆசிரியர்கள், பாடசாலையில் அவர்களை வளப்படுத்த வேண்டிய கடமையை புரிந்தேயாக வேண்டும். அண்மைக்காலமாக ஆசிரியர்கள், மாணவர்கள் தொடர்பான சிறுசிறு பிணக்குகளும், வழக்குகளும் நீதிமன்றத்திற்கு ஆங்காங்கே வந்துகொண்டே இருக்கின்றன.

அதிலும் ஆசிரியர் மாணவனைத் தாக்கினார், மாணவன் ஆசிரியரைத் தாக்கினார் மற்றும் பாடசாலைகளில் ஏற்படுகின்ற மோதல்கள் என்பன நீதிமன்றம் வரை வருவது நாங்கள், எங்களை சுய பரிசோதனை செய்து, எங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய விடயமாகும்.

ஸ்மாட் கைப்பேசிப் பாவனைகள் அதிகரித்துள்ளமையால் வருகின்றன பிரச்சினைகளும் தற்காலத்தில் அதிகரித்து காணப்படுகின்றது. விசாரிக்கின்ற போது மாணவர்களும், மாணவிகளும் தெரிவிக்கின்ற கருத்துக்களை பார்க்கின்றவேளை வியப்பாக இருக்கின்றது என தெரிவித்துள்ளார.



## புத்தகப்பைகள் அன்பளிப்பு



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு புத்தளம் – வேப்பமடு அல் அரபா பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் புத்தகப் பைகளும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

உளவியல் ஆலோசகரும் அமேசன் கல்லூரியின் பணிப்பாளருமான இல்ஹாம் மரிக்காரினால், பாலர் பாடசாலையின் பொறுப்பாசிரியை மஸ்கூறா ஆரிபின் வேண்டுகோளின் பேரில் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

– எம்.யூ.எம்.சனூன்

## மையவாடிக்கு செல்வதில் சிக்கல்

ஏ.எம்.ஜலீல்

உக்குவளை - மாருகொன ஜும்ஆ பள்ளிவாசலுக்குரிய மையவாடிக்குச் செல்லும் கம்சபா (பிரதேசபையில் பதிவு செய்யப்பட்டது) பாதை சில தினங்களாகப் பெய்த கடும் மழையினால் இடிந்து முற்றாக சேதமடைந்திருப்பதால் இந்த மையவாடியில் மரணங்களை அடக்கம் செய்வதற்காகக் கொண்டுசெல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்த மையவாடி பொறுப்பாளர் ஏ.ஆர்.எஸ்.ஹமீட் உக்குவளை பிரதேசசபையின் கவனத்துக் கொண்டுவந்ததையடுத்து, இச்சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறிப்பிட்ட சேதமடைந்த பாதையைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.



அவ்வாறிருக்க, மாருகொன உடத்தாவல ரயில் நிறுத்துமிடத்தையடுத்த மேட்டு நிலப்பகுதியின் குறிப்பிட்ட பகுதி மண்சரிவுக்கான அடையாளம் இருப்பதால், இப்பகுதி வாழ் குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்குச் செல்லுமாறு உக்குவளை பிரதேச செயலக அனர்த்த நிவாரண நிலைய அதிகாரி உட்பட கிராம உத்தியோகத்தர் அறிவுரை வழங்கியுள்ளனர்.

## C.Dக்கு சேவை நீடிப்பு

முன்னாள் பொலிஸ் மா அதிபர் C.D.விக்ரமரத்னவுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை (13) முதல் அமுலுக்கு வரும் வகையில், மூன்று வாரங்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



## கசிப்புடன் இருவர் கைது



சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு - நாவற்காடு கூளாமுறிப்பு காட்டுப்பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையமொன்றை சனிக்கிழமை (14) சுற்றிவளைத்த புலனாய்வு துறையினர், அங்கிருந்த இருவரை கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 760 லீற்றர் கசிப்பும், உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கோடாவையும் கைப்பற்றியுள்ளனர்.

## பாதித்த விவசாயிகளுக்கு உதவித் தொகை



பு.கஜிந்தன்

யாழ். மாவட்டத்தில் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் வறட்சியாலும், பொருளாதார வீழ்ச்சியிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பாலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்றுள்ளது.

இதில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கலந்து கொண்டு, 40 விவசாயிகளுக்கான முதற்கட்டமாக கொடுப்பனவுகளை வழங்கி வைத்துள்ளார்.

வறட்சியாலும், பொருளாதார ரீதியாக பின்னடைந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், தலா ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக 05 நபர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வட மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, பிரதேச செயலாளர்கள் துறைசார் திணைக்கள தலைவர்கள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

## “அடங்க மறுத்தால் கடிவாளம் போடுவோம்”



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகள் அத்துமீறி அகற்றுவதும் விவசாய நிலங்களை சீர்குலைக்கும் செயற்பாடுகளில் பெருந்தோட்ட நிறுவனங்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வாதிகாரம் ஒரு சங்கிலி போன்றது சங்கிலி திரும்பினால் சவுக்கடி தான் எனவும் எச்சரித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தின் பங்குதாரர்களுக்கு இலாப பங்கீடு வழங்காமல் ஏமாற்றியும் ஊதியத்தின் அளவை குறைக்க நினைக்கும் பகல் கொள்ளைக்காரர்களாக மாறிக் கொண்டு வரும் தோட்ட நிர்வாகங்கள், தோட்ட மக்களின் குடியிருப்புகளில் அத்துமீறி நுழைந்து தோட்டத் தொழிலாளர்களைத் தாக்கி விவசாய நிலங்களுக்கு சேதத்தை விளைவிக்கினது.

பொறுமை கடந்து விட்டது மாத்தளை, காவத்தையை தொடர்ந்து இன்று அபதேனியவிலும் முறையற்ற ரீதியில் பெருந்தோட்டங்களில் சர்வாதிகார ஆட்சி நடத்த நினைக்கும் பெருந்தோட்ட நிறுவனங்கள், மாறுங்கள் இல்லையேல் மாற்றப்படுவீர்கள். அடங்க மறுக்கும் அடாவடி குதிரைக்கு கடிவாளம் போடும் காலம் வந்து விட்டது என்றும் எச்சரித்துள்ளார்.

# கான்ஸ்டபிளை கழுத்தை நெரிக்க முயன்றவர் மரணம்

அவிசாவளை- தல்துவ பிரதேசத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரை சுட்டுக் கொன்றதுடன், மேலும் இருவரை படுகாயப்படுத்திய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 21 வயது இளைஞன், கைவிலங்குகளுடன் பொலிஸ் கான்ஸ்டபிளை கழுத்தை நெரிக்க முயற்சித்துள்ளார்.

அவ்வாறு முயற்சித்தபோது இருவரும் மல்லுக்கட்டிக்கொண்டுள்ளனர். அதில் காயமடைந்த சந்தேகநபர், ஞாயிற்றுக்கிழமை (15) மரணமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் கான்ஸ்டபிளும் ஆபத்தான நிலையில் அவிசாவளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவிசாவளை பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரட்டை படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அவிசாவளை மனிங்கமுவ பகுதியைச் சேர்ந்த மகேஷ் தனஞ்சய என்பவரே உயிரிழந்துள்ளார்.

# உயிரையும் விலையாகக் கொடுக்க முயற்சிக்கும் நோயாளர்கள்

எமது நாட்டைப் பொறுத்தவரையில், பிரச்சினையைத் தீர்க்காது, அப்பிரச்சினையை அப்படியே இழுத்துக்கொண்டு செல்வதற்கான இயலுமை இருக்கும் வரையிலும் மக்கள் ஏமாளிகளாகவே இருக்கவேண்டும். அரசியலை பொருத்தமட்டில், பிரச்சினையை ஏற்படுத்தி விட்டு அதில் குளிர்காய்வதில் அவர்களுக்குத் தனி சுகமே கிடைக்கின்றது.

இவ்வாறுதான் முக்கியமான பிரச்சினைகள் தீர்வின்றியே கடத்தப்படுகின்றன. இதற்கிடையே குழுக்களை அமைத்து காலங்களையும் கடத்திவிடுகின்றனர். எமது நாட்டின் சுகாதாரத்துறையைக் கட்டியெழுப்ப முடியுமா? என்ற கேள்வி எல்லோரிடத்திலும் எழும்புகின்றது. சாதாரண மக்கள் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு அஞ்சுகின்றனர். அந்தளவுக்கு மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கண்நோயானது நாடளாவிய ரீதியில் பரவத் தொடங்கிவிட்டது. நம்பத்தகுந்த தனியார் வைத்தியசாலைக்குச் சென்று கண்களுக்கு மருந்தை ஊற்றிக்கொள்ளும் பலரும், அரச வைத்தியசாலையின் பக்கமே தலையைக் காட்டுவதில்லை. சுகாதாரத்துறை அந்தளவுக்கு மோசமாகிவிட்டது. எனினும், பிரச்சினைகளுக்குத் தீர்வை காண்பதற்கோ, குற்றமிழைத்தவர்களை தண்டிப்பதற்கே எவருக்கும் முதுகெலும்பு இல்லையென்பது வெட்கக்கேடான விடயமாகும்.

இந்தியக் கடன் உதவி முறையின் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரத்தம் தொடர்பான மருந்து தொடர்பில் தற்போது கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சில தரக்குறைவான மருந்துகள் காரணமாக நாட்டின் சுகாதாரத்துறைக்கு நாட்டு மக்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

சில மருந்துகளினால் உயிரையும் விலையாகக் கொடுக்க வேண்டிய நோயாளர்கள் இருப்பதால், சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும் அளவிற்கு இந்தப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது. மேற்கண்ட மருத்துவம் தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி, அமைச்சர் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றாலும் பிரச்சினை அப்படியே இருப்பதையே காட்டுகிறது. நோயாளிகளுக்கு ஒவ்வாமை எதிர்விளைவுகளை ஏற்படுத்தியதாக வெளியான அறிக்கைகளின் காரணமாக மருந்தின் பயன்பாடு நிறுத்தப்பட்டது. ஆனால் அந்த மருந்தை இலங்கைக்கு கொண்டு வந்த நிறுவனம் போலி மருந்து என ஒப்புதல் பெற சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

இந்த போலி ஆவணங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சினால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்குப் பொறுப்பான எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றியோ அல்லது இதுபோன்ற குற்றச்சாட்டைச் சுமத்துபவர்கள் பற்றியோ இதுவரை குறிப்பிடப்படவில்லை, இது எதிர்கால விசாரணைகள் குறித்து கடுமையான சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்வது பலகோடி ரூபாய் பெறுமதியான வர்த்தகமாகும். இதற்கு பலம் வாய்ந்த நிறுவனங்கள், பலம் வாய்ந்த அதிகாரிகள் மற்றும் பலம் வாய்ந்த அரசியல்வாதிகள் ஆதரவளிக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே. விசாரணைக்குத் தேவையான தகவலை இலங்கை அதிகாரிகளுக்கு வழங்குவது சில மணி நேரங்களில் முடியும். ஆனால், வாரங்கள் கடந்தாலும் இன்னும் அது குறித்து மௌனம் நிலவுகிறது.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

குடும்ப உறுப்பினர்களிடையே பொய்களைத் தாராளமாக உபயோகித்தால், அந்தக் குடும்பத்தில் நிம்மதி கிட்டாது. எதையும் ஒளித்து மறைப்பது, வெளிப்படைத் தன்மையின்றிப் பழகினால், அவர்களிடம் உண்மைத் தன்மையே அற்றுப்போய்விடும்.

ஒருவரை ஒருவர் நம்பாமல் நடந்தால், அவர்களிடம் கோபதாபம் தானாகவே வந்துவிடும். குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களும் மனம் விட்டுப் பேசவேண்டும். இதனால் குடும்ப உறவு மேலோங்கும்.

குடும்ப உறவு ஒரு பரம்பரையுடன் முடிவதில்லை. எதிர்காலத்துடன் வளர்ந்து செழிக்க வேண்டிய பந்தங்கள். குடும்ப உறவுகளைச் சிதைக்கக்கூடாது. வீட்டில் உள்ள பிள்ளைகளுடன் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். பொய்களைப் பேசி அவர்களை ஏமாற்றலாகாது.

கல்வி கற்றலில் மட்டுமல்ல, ஒழுக்க நெறி, பக்தி மார்க்கம், பெரியோர்களை மதித்து நடத்தல் என்பவை இளமைப் பராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும்.

குடும்பங்கள் எல்லாம் இணைந்ததே, இந்தப் பரந்த உலகம். தனித்து வாழ்வது அல்ல, பொறுப்பு, நம்பிக்கையுடன் வாழ்க்கையை அமைத்தால், அது போல் இன்பம் வேறேது?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# உலக உணவு தினம் 2023

நீரானது உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது. இந்த ஆண்டு பல அத்தியவசியமான வளங்களை கொண்டாடும் வகையில் உலக உணவு தினத்தின் கருப்பொருள் அமைந்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை, அதன் முன்னேற்றத்தின் பெரும் பாகத்திற்கு நீர் வளமானது மிக முக்கிய கூறாக எதிரொலிக்கிறது. மேலும் நீர் கிடைக்காத நிலையில் ஏற்படும் காலநிலை மாற்றமானது வெப்பநிலையை அதிகரிப்பதுடன் மழைவீழ்ச்சிப் போக்குகளை சீர்குலைப்பதால் நீர்நிலைகள் வறண்டு போகின்றன. அத்துடன், வளர்ந்து வரும் மக்கள் தொகையானது நீர் மட்டத்தை அதிகரிக்கவிடாது அழுத்தத்தை கொடுப்பதால் நாடு தொடர்ந்து வளர முடியாதுள்ளது. இன்று குறிப்பாக விவசாயம் மற்றும் நீர் முகாமைத்துவத்தில் புதுமையானவற்றை உள்வாங்கி, நிலைபேறான செயன்முறைகளை கையாண்டு நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய தீர்மானங்களை எடுக்கவேண்டிய கட்டத்தில் இலங்கை உள்ளது.

காலநிலைக்கு தூண்டற்பேறான நிலைத்து நிற்கக்கூடிய செயற்பாடுகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையே எந்தவித வர்த்தக பரிமாற்றமும் இல்லை என்பது இப்போது தெளிவாக இருக்க வேண்டும். மக்களுக்காக, இலாபத்திற்காக, உலகத்திற்காக, தொடர்ச்சியான நமது செழிப்பிற்காக, முக்கியமாக நாம் விவசாயத்தில் நிலையான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். இலங்கையானது அண்மைக்கால நெருக்கடிகளில் இருந்து மீண்டு வருவதால், அனைத்து குடிமக்களதும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி விவசாய புரட்சி, உணவு உற்பத்தி மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான முன்னுரிமைப்படுத்தப்பட்ட நீண்டகாலம் நிலைத்திருக்ககூடிய புதிய நடைமுறைகளை ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாக அமையுமாறு கையாளுதல் வேண்டும்.

நீர் அனைத்து துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தும் என்பதால் உலக உணவு தினத்திற்குரிய கருப்பொருளை நீரிலிருந்து ஆரம்பிப்பது சிறந்தது. நீர் வளங்கள் நிறைந்த நாடாக இலங்கை இருந்தாலும் நீர் முகாமைத்துவத்தில் சவால்களை எதிர்கொண்டுள்ளது.

FAO மற்றும் UN நிறுவனங்களினால் 2021ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில், 90.8 சதவீதம் குறிகாட்டியுடன் 'நீரின் உயர் அழுத்தம்" என இலங்கை வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையீடு நன்னீர் வளங்கள் மற்றும் அவற்றின் நிலைத்திருக்கும் தன்மை மீதான மனித நடவடிக்கைகளினால் ஏற்படும் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை பிரதிபலிக்கிறது. நாட்டினுடைய 'நீர்' பற்றிய வினாக்களுக்கு நீரின் தரம், அளவு மற்றும் உப்புத்தன்மை, வறட்சியின் போது தடையின்றி பாதுகாப்பான குடிநீரை எவ்வாறு வழங்குவது? உற்பத்தி திறனை எவ்வாறு விரிவுபடுத்துவது? நீர் ஆதாரங்களில் அழுத்தத்தை எவ்வாறு குறைப்பது மற்றும் நீரின் தரம் மோசமடைவதை எவ்வாறு தடுப்பது? என்பவற்றின் அடிப்படையில் விடை காணப்படுகிறது.


விம்லேந்திர ஷரன் – ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை மற்றும் மாலத்தீவுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதி


ஷெரினா தபசும் – விவசாய மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியம், இலங்கை மற்றும் மாலைதீவு நாட்டின் இயக்குனர்


அப்துர் ரஹீம் சித்திக் – பிரதிநிதி மற்றும் நாட்டுப் பணிப்பாளர், உலக உணவுத் திட்டம் இலங்கை

காலநிலை மாற்றத்தால் தூண்டப்படும் எதிர்வு கூறமுடியாத தன்மையானது உயிர்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் அழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் இலங்கையின் நீர் உட்கட்டமைப்பில் பாதிப்புகளை அதிகரிக்கச் செய்யும். நிலையான விவசாய உணவு முறைகள் ஊடாக நீர் அழுத்தத்தைக் குறைப்பதற்கான வழிகள் ஏற்படுத்தப்படுகின்றது. ஏற்கனவே வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள் பயிர் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சிக்கும் குறிப்பாக கிராமப்புற ஏழைகள் மத்தியில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிப்பதற்கும் வழிவகுக்கிறது. இன்னும் 10இல் நான்கு பேருக்கு குழாய் நீர் கிடைப்பதற்கான வசதிகளற்று உள்ளனர். நாட்டின் மக்கள் தொகையின் அண்ணளவாக 30 சதவீதத்திற்கு, 70 சதவீத நிலப்பரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் உலர் மற்றும் இடை வலயங்கள் பெருமளவு விவசாயத்தில் வேலைவாய்ப்பை வழங்குகின்றன. அத்துடன், இடைவிடாத வறட்சியின் காரணமாக கடுமையான நீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இந்நிலை இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடரலாம்.

எனவே, நீர் நெகிழ்திறனைக் கட்டியெழுப்புதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கமடைதல் முக்கியமானது. ஆனால் இந்த மாற்றத்திற்கு ஒரு கூட்டு அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது.

விவசாயிகள், நுகர்வோர், தனியார் துறை, அரசு, ஊடகங்கள் மற்றும் நாட்டின் இளம் சமூகத்தினரின் தீவிர ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. ஐக்கிய நாடுகள் சபையும் குறிப்பாக அதன் உணவு சார்பான முகவர்கள் இந்த மாற்றத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்குத் தயாராக உள்ளன.

பல ஆரம்ப முயற்சிகள் ஏற்கனவே சாதகமான முடிவுகளைத் தருகின்றன. எடுத்துக்காட்டாக, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) ஆனது நெற்செய்கையில் ஈடுபடும் 6,000 விவசாயிகளுக்கு உதவி வழங்குவதன் மூலம் பயிர் விளைச்சலை அதிகரிக்கும் அதேவேளையில், குறைந்த இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் நவீன அணுகுமுறைகளை பின்பற்றி நிலையான நெல் சாகுபடியை ஊக்குவிக்கின்றது. பெரும்பாலும், FAO பல முக்கிய பயிர்களில் நல்ல விவசாய நடைமுறைகளில் (GAP) வெற்றியடைந்துள்ளது. இந்த வெற்றி இரசாயன உள்ளீடுகள், நீர் மாசுபாடு ஆகியவற்றை குறைத்து ஆரோக்கியமான மற்றும் நிலைபேறான சூழலுக்கான இயற்கை வளங்களை பாதுகாப்பதன் மூலம் விவசாயிகள் மற்றும் சூழல் தொகுதிக்கு பயனளிக்கிறது.

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) தற்போது நாட்டின் உலர் வலயங்களில் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து சுற்றுச்சூழல் மற்றும் சமூக ரீதியாக பாதிக்கப்படக்கூடிய மூன்று ஆறுகளில் நீர் முகாமைத்துவத்திற்கான தொட்டி அடுக்கு அமைப்புகளுக்கு ஆதரவளித்து. அவற்றை புனரமைத்ததனால் விவசாயிகள் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரண்டிலும் விவசாயம் செய்ய முடியும். உலக உணவுத் திட்டம் (WFP) அவசரகாலத் தயார்நிலை மற்றும் பதிலளிப்பு ஆதரவை அரசாங்கத்திற்குத் தயார்படுத்துவதற்கும், தொடர்ச்சியான காலநிலை அதிர்ச்சிகளின் தாக்கத்தைத் தணிப்பதற்கும் உதவுகிறது. மேலும் இத்திட்டத்தில் தேசிய மற்றும் துணை தேசிய நிறுவனங்களுக்கு பருவமழை காலங்களில் ஏற்படிவிருக்கும் பேரழிவுகளைத் தடுக்க முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் மற்றும் பிற கருவிகளைப் பயன்படுத்த உள்வாங்கப்பட்டுள்ள அதேவேளை, மக்களுக்கான உணவு தடங்கலின்றி கிடைப்பதை உறுதிசெய்கின்றது.

ஒவ்வொருவரும் இன்றைய காலத்திலும் எதிர்காலத்திலும் நிலைபேறான நீர் மற்றும் சுகாதார சேவைகளை பெறுவதற்கான வசதியை பெற்றிருக்க வேண்டும். உண்மையில், எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வானது தற்போது பின்பற்றும் நிலைபேறான வளங்களின் பாவனை முறைகளில் சார்ந்துள்ளது. இந்த மாற்றத்தை இளம் சமூகத்திற்கு மாற்றுவதற்கு இலங்கை கடன்பட்டுள்ளது. இளம் சமூகத்தினரே மாற்றத்தின் புதுமைகளை உந்துதல் மற்றும் மிகவும் நிலையான மற்றும் சமமான எதிர்காலத்திற்காக வாதிடும் சக்திவாய்ந்த முகவர்களாக இருக்க முடியும்.

இலங்கையில் நீர், உணவு மற்றும் நிலைத்திருக்கும் தன்மை ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு மறுக்க முடியாதது. இந்த உலக உணவு தினம் நமது பகிரப்பட்ட பொறுப்பின் ஒரு சக்திவாய்ந்த நினைவூட்டலாக செயல்படுகிறது. விவசாயம் மற்றும் நீர் முகாமைத்துவத்தில் நிலைபேறான நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், இலங்கை எதிர்காலத்திற்கான உணவு பாதுகாப்பது மட்டுமல்லாமல், நமது உலகத்தின் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் இணக்கமான சகவாழ்வின் மாதிரியுடன் உலகை ஊக்குவிக்கவும் முடியும். இது ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட பார்வை ஆகியவற்றைக் கோரும் ஒரு பயணமாகும் - இப் பயணம், ஒன்றாக மேற்கொள்ளப்படும் போது, அனைவருக்கும் பிரகாசமான மற்றும் நிலையான எதிர்காலத்திற்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கும். உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை நோக்கிய இந்த மாற்றத்திற்கான பாதையில் நாம் அனைவரையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

## கடிதங்கள்


### துவசம் செய்த காட்டு யானைகள்

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சில மக்கள் குடியிருப்பு பிரதேசங்களில் ஞாயிற்றுக்கிழமை (15) காட்டு யானைகள் சில அதிகாலை 4.30 மணியளவில் உட்புகுந்து பல்வேறு சேதங்களை உண்டுபண்ணியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியினை அண்டிய மக்கள் குடியிருப்புக்குள் உட்புகுந்த இக்காட்டு யானைகள், வீடுகள் மற்றும் அக்கரைப்பற்று தேசிய பாடசாலை போன்றவற்றின் சுற்று மதிற்சுவர்களை உடைத்து சேதப்படுத்தியுள்ளதுடன், பயன் தரும் பல மரங்களையும் நாசம் செய்துள்ளன. மேட்டு நிலப் பயிர்கள் மற்றும் மரம் செடி கொடிகள் பலவற்றையும் இக்காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன. இரவு வேளைகளில் காட்டு யானைகள் பல இப்பிரதேசத்தில் நடமாடுவதால் தாம் தினமும் பல்வேறான இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் இக்காட்டு யானைகள், கால்நடைகளுக்காக களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த பெறுமதி மிக்க உணவுப் பைகள் உள்ள கட்டடங்களின் சுவர்களை உடைத்து, உண்டு நாசப் படுத்தியுள்ளதுடன் மக்களையும் அச்சப்படுத்தியதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எம்.ஏ.றமீஸ்





# அவர்களும் மனிதர்களே



ரா.மனோஜ்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
ஊடக கற்கைகள் துறை

இந்த பூமி தோன்றிய காலத்தில் இருந்து இன்று வரை எத்தனையோ வளர்ச்சி கட்டங்களைத் தாண்டி இன்றைய அதிநவீன உலகத்தினை அடைந்திருக்கின்றோம் .அந்த வகையில் இன்னும் பல வளர்ச்சி கட்டங்களை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கின்றோம். இந்த உலகில் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனிதனை மிகவும் வித்தியாசமானதும் விசித்திரமானதுமான ஓர் உயிரினமாகும்.

உயிரினங்களுக்கு பால் வேறுபாடு என்பது பொதுவான ஒரு விடயமாகும். அந்த வகையில் மனிதனிலும் ஆண்-பெண் என்ற வேறுபாட்டினை கடந்து இன்னும் பல பாலினத்தவர்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் தொடர்பாக மேலும் நோக்குவமாயின்,

இவ்வாறான பாலின அடையாளங்களை குறிப்பதற்காக LGBTQ+ என்ற பெயர் உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுகின்றன. இன்றைய நவநாகரீக காலத்தில் இப்பாலின சமூகத்திற்கான அந்தஸ்து நிலையானது ஒவ்வொரு நாடுகளிலும் மதிக்கப்பட்டும் அங்கீகாரத்திற்கு உட்பட்டுமே காணப்படுகிறது. அந்தவகையில் இச்சமூகத்தினரை சமூகத்தின் ஒரு பகுதியினர் என பிரதிநிதித்துவப்படுத்த ஒவ்வொரு வருடத்தின் ஜீன் மாதமும் இவர்களை கொண்டாடும் மாதமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு சமூகத்தினரின் அல்லது சமூக பிரிவினரின் ஒடுக்கப்பட்ட தன்மையிலிருந்து மீட்டெடுப்பதற்காகவே அவர்களுக்கான சில தினங்கள் உலகளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தப்படும். அந்தவகையில் LGBTQ+ சமூகத்தினருக்காக ஜூன் மாதம் முழுவதுமே அவர்களுக்கான மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு இச்சமூகத்தினருக்கு நிகழ்ந்தேறிய சில நிராகரிப்புகளும் ஒடுக்குமுறைகளுமே காரணமாக அமைந்தன. அதாவது பாலினம் ரீதியிலான மாற்றங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உறவினர்களினாலும் சமூகத்தினராலும் ஒதுக்கப்படுதல், சரியான தகுதிகள் இருந்தாலும் சில பணிகள் கிடைக்கப்பெறாமை, பாலியல் மற்றும் குற்றவியல் செயற்பாடுகளில் இச்சமூகத்தினரே ஈடுபடுகின்றனர் என்ற தவறான கண்ணோட்டம், இவர்களை ஏளனமாக விமர்சிக்கும் தன்மை என்பனவே காரணங்களாக அமைகின்றன.

இன்றளவிலும் கொண்டாடப்படும் இந்த மாதமானது LGBTQ சமூகத்தினர்களின் குரல்களை மேம்படுத்துவது, அவர்களின் கலாசாரத்தை கொண்டாடுவது மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன் அவற்றினை ஆதரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மாதமாகக் கொள்ளப்படுகின்றது.

1969ஆம் ஆண்டு ஓரினச்சேர்க்கையாளர்களின் விடுதலை போராட்டங்களின் தொடர்தன்மை நியுயோர்க் நகரின் கிரின்வீச் கிராமத்தில் இடம்பெற்ற ஸ்டோன்வால் கலவரத்திற்கு பிறகே ஜூன் மாதமானது தொடங்கப்பட்டது.இவ்வாறு தொடங்கப்பட்ட இச்சமூகத்தினரின் கொண்டாட்டங்கள் அமெரிக்காவில் மாத்திரமன்றி வெவ்வேறு நாடுகளுக்கும் பரவியது. இதனோடு 1999இல் ஜனாதிபதி பில் கிளின்டன், ஜூன் மாதமானது இச்சமூகத்தினரின் பெருமைக்குரிய மாதமாக அறிவித்தபோது, அதனை அதிகாரப்பூர்வமாக அமெரிக்க அரசாங்கம் அங்கீகரித்தது.

இதனைத் தொடர்ந்து வந்த பராக் ஒபாமா ஜூன் மாதத்தை The pride month of june என்று அறிவித்தார்.

இம்மாதத்தில் LGBTQ + சமூகத்தினரின் பாரம்பரிய அணிவகுப்புக்கள், ஆர்ப்பாட்டங்கள், நேரடி திரையிடல்கள் மற்றும் நினைவுச்சின்னங்களை காட்சிப்படுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படும். இவர்களது பெருமையினை அடையாளப்படுத்துவதற்காக 1978இல் கலைஞர் கில்பிரட் பேக்கரால் உருவாக்கப்பட்ட வானவில் கொடி அடையாளமாக இன்றளவிலும் பயன்படுத்தப்படுகிறது.

இக்கொடியில் சிவப்பு நிறமானது வாழ்க்கையின் அடையாளமாகவும் செம்மஞ்சள் நிறம் குணப்படுத்தலின் அடையாளமாகவும் மஞ்சள் நிறமானது சூரிய ஒளியாகவும் பச்சை நிறமானது இயற்கையையும் நீலம் நல்லிணக்கத்தையும் குறித்து நிற்கிறது. இதன்படி சுயமரியாதை வானவில் பெருமிதத்தின் நோக்கம் LGBTQ+ சமூகத்தினர், இச்சமூகத்தில் எவ்வாறு பங்குபற்றுகிறார்கள்? மற்றும் சமூக பிரச்சினைகளில் எவ்வாறு ஒரு பங்காக இருக்கிறார்கள்? என்பதனை நம் சமூகத்திற்கு உணர்த்துவதனையே நோக்கமாக கொண்டுள்ளது.

The pride month of June என கொண்டாடும் ஜூன் மாதத்தினை கொண்டாடும் முகமாக உலகளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சி நிரல்கள் ஒழுங்கமைக்கப்பட்டு வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. அந்த வகையில் அமெரிக்காவின் சில பகுதிகள், இந்தியாவின் சென்னை, இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் பாரியளவில் கொண்டாடப்பட்டது.

> 1999இல் ஜனாதிபதி பில் கிளின்டன் ஜூன் மாதமானது ஓரினச்சேர்க்கையாளர்களின் பெருமைக்குரிய மாதமாக அறிவித்தபோது, அதனை அதிகாரப்பூர்வமாக அமெரிக்க அரசாங்கமும் அங்கீகரித்தது

பெரும்பாலும் நடை பவனிகள் இடம்பெற்றதை அவதானிக்ககூடியதாக இருந்தது. அதன்படி இலங்கையில் வெளிகள பெருமித முகாம் அநுராதபுரத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் நடைபவனி, வர்ணமயமான பட்டம் விடும் நிகழ்வு (அரியாலை), கடற்கரை நடை போட்டி சட்டம் மற்றும் பிரச்சினைகள் குறித்து காவல்துறை மற்றும் ஊடகவியலாளர்களுக்கான பட்டறை போன்றன இடம்பெற்றன.

இவற்றோடு கட்டுரையாக்க போட்டி, குறுந்திரைப்பட போட்டிகள் போன்ற பல்வேறு படைப்பாக்க நிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டிருந்தன. இதனால் இச்சமூகத்தினர் தன்னையும் தனது பாலின அடையாளத்தையும் சமூகத்தில் பிரதிபலிப்பதற்கு இக்கொண்டாட்ட நிகழ்வுகளை ஒரு களமாக பயன்படுத்திக்கொண்டனர்.

இந்தவகையில் பாலினம் எனப்படுவது இயற்கைக்கு முரணானது என அடையாளப்படுத்த முடியாது. இதனால் இயற்கையின் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு அதன்பாணியில் பயணித்து செல்ல வேண்டியதே சிறந்ததாகும்.

இச்சமூகத்தினரின் மாற்றங்களை ஏனைய சமூகத்தினர் ஏற்றுக்கொள்ளுதல் என்பது அவரவர்களது மனநிலையினையும் எண்ணப்பாடுகளையும் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

தம்மை போலவே அவர்களுக்கும் உணர்வுகள் காணப்படுமென்பதை என்று உணரப்பட்டும் உணர்த்தப்பட்டும் நமது எண்ணங்களால் மாற்றமடைகின்றோமோ அன்றே இச்சமூகத்தினருக்கு சமூக அந்தஸ்து கிடைக்கப்பெறுமென்பது எனது கருத்தாகும்.

"அவர்களும் மனிதர்களே அவர்களும் நம் உடன்பிறப்புகளே"

Ex-Pack Corrugated Cartons PLC க்கு

# காபன் நடுநிலை சான்றிதழ்



அபர்தீன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) நிறுவனத்தின் துணை நிறுவனமும், இலங்கையின் அலைவுநெளிவுள்ள பொதிகள் உற்பத்தி நாமமுமான Ex-Pack Corrugated Cartons PLC, இரண்டாவது வருடமாகவும் காபன் நடுநிலை சான்றிதழைப் பெற்றுள்ளது. அதனூடாக, காலநிலை மாற்றத்தை தடுப்பதற்கு அவசியமான செயற்பாடுகள் மீதான தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்துள்ளது.

தான் இயங்கும் தொழிற்துறையில் இந்த சாதனை மிகவும் வரவேற்கத் தக்க அம்சமாக இந்த சாதனை அமைந்துள்ளது. கடந்த ஆண்டில் 22.3 சதவீதத்தினால் தனது காபன் வெளியீட்டை குறைத்துக் கொள்ள Ex-Pack இனால் முடிந்திருந்தது. நிறுவனத்தின் சகல அம்சங்களைம் இலக்கு வைத்து, தனது வருடாந்த பச்சைஇல்ல வாயு (GHG) வெளியேற்றங்களை குறைத்திருந்தது.

பச்சைஇல்ல வாயு (GHG) மதிப்பீடுகள் அதன் வலு மற்றும் நீர் நுகர்வு, கழி முகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களிலிருந்து பெறப்பட்டதுடன், தேசிய தூய்புரவாக்கல் தயாரிப்பு நிலையத்தினால் (National Cleaner Production Centre (NCPC)) உறுதி செய்யப்பட்டிருந்தன. தொழிநுட்ப வழிகாட்டல்களை முன்னணி பசுமை கட்டட, MEP வடிவமைப்பு மற்றும் காபன் நடுநிலை ஆலோசனை ஆகியவற்றில் முன்னோடியாக அமைந்துள்ள co-energi இனால் வழங்கப்பட்டிருந்தது. Ex-Pack க்கு இந்த சான்றிதழைப் பெற்றுக் கொள்வதில் இது முக்கிய பங்கை ஆற்றியிருந்தது.

Ex-Pack தவிசாளர் சத்தார் காசிம் கருத்துத் தெரிவிக்கையில், "பெருமளவு தொழிற்சாலை செயற்பாடுகளை முன்னெடுக்கும் வியாபாரமாக அமைந்துள்ள நிலையில், தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாகவும் காபன் நடுநிலை அந்தஸ்தை பெற்றுக் கொண்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. சூழலுக்கு எமது தாக்கத்தை குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்கான முயற்சிகளை நாம் எப்போதும் மேற்கொண்டிருந்தமைக்கான கௌரவிப்பு நீண்ட காலமாக எமக்கு கிடைக்க வேண்டியிருந்தது. நிகர பூஜ்ஜிய காபன் வெளியீடு எனும் இலக்கை எய்துவது தொடர்பில் எமது ESG அரண்களை வலிமைப்படுத்தும் மேலதிக செயற்பாடுகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றோம்" என்றார்.

காபன் வெளியீடுகளை தணிப்பது மற்றும் பிரதியீடு செய்வது மற்றும் நிலைபேறாண்மை தொடர்பில் தொழிற்துறையின் சிறந்த செயன்முறைகளை பின்பற்றுவது போன்றவற்றை களத்திலுள்ள நிபுணர்களுடன் கலந்தாலோசித்து மேற்கொள்ளும் செயற்பாடுகளை Ex-Pack முன்னெடுக்கின்றது.

1998ஆம் ஆண்டு நிறுவப்பட்ட Ex-Pack Corrugated Cartons PLC, இலங்கையில் அலைவு நெளிவுள்ள பொதியிடல் தீர்வுகள் உற்பத்தித் துறையில் முன்னணி செயற்பாட்டாளராக அமைந்திருப்பதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பொதியிடல் தீர்வுகளை வழங்குகின்றது. நிறுவனம் ISO 9001-2015, ISO 14001-2015, FSC COC, WRAP ஆகிய சான்றிதழ்களைப் பெற்றுள்ளதுடன், NCE ஏற்றுமதி விருதுகள், CNCI விருதுகள், லங்கா ஸ்டார் விருதுகள், NBE விருதுகள், லங்கா CSR விருதுகள் மற்றும் Green விருதுகள் ஆகியவற்றில் கௌரவிப்புகளைப் பெற்றுள்ளது.

2023 தெற்காசிய இலத்திரனியல் வணிக மாநாட்டில்

# Cross-border E-commerce, AI மற்றும் Tech for Good ஆதிக்கம்

தெற்காசியாவின் முன்னணி ஒன்லைன் சந்தைப்பகுதியான Daraz குழுமத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு கொழும்பில் இரண்டு தினங்கள் நடைபெற்ற இலத்திரனியல் வணிக மாநாடு 2023இல், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் துறையின் முன்னணி நிபுணர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் பங்கேற்றிருந்தனர். இலத்திரனியல் வணிகத்தின் வாய்ப்புகள் தொடர்பில் இவர் ஆராய்ந்ததுடன், டிஜிட்டல் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதில் பெண்கள் ஆற்றும் முக்கிய பங்களிப்பையும் கொண்டாடியிருந்தனர்.




பிராந்தியத்தில் இலத்திரனியல் வணிகம் பின்பற்றப்படுவதை துரிதப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் இடைவெளியை இல்லாமல் செய்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தும் உள்ளார்ந்த விளக்கங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் போன்றவற்றை தெற்காசிய இலத்திரனியல் வணிக மாநாடு கொண்டிருந்தது. நாடுகளுக்கிடையிலான (e-commerce) இலத்திரனியல் வணிகத்துக்கான மூலோபாயங்கள், தொழில்முயற்சியாண்மையை ஊக்குவித்தல், சமூக தாக்கத்துக்கு தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல் மற்றும் கொள்கை கட்டமைப்புகளை வழிநடத்தல் போன்ற முக்கியமான தலைப்புகள் தொடர்பில் இந்த மாநாட்டில் பேசப்பட்டிருந்தது. மேலும், இலத்திரனியல் வணிகத்துறையை முன்நோக்கி கொண்டு செல்வதற்கு உள்ளடக்கத்தின் முக்கியத்துவம், நிலைபேறாண்மை மற்றும் பிரத்தியேகமான வாடிக்கையாளர் அனுபவங்கள் போன்றன தொடர்பிலும் நிபுணர்கள் கலந்துரையாடியிருந்தனர்.

மாநாட்டு தொடர்பில் Google தென் கிழக்காசியாவின் வினைத்திறன் தீர்வுகள் தலைமை அதிகாரி ஷபனா பதாமி கருத்துத் தெரிவிக்கையில், "Daraz இனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலத்திரனியல் வணிக மாநாட்டில் பெண்கள் நிகழ்வில் இரண்டாவது ஆண்டாக இம்முறை எனக்கு பேச வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நான் பெருமை கொள்கின்றேன். இன்றைய காலகட்டத்தில் மனிதகுலம் எதிர்கொண்டுள்ள மிகவும் நுணுக்கமான தொழில்நுட்பமான artificial intelligence பற்றி பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது. AI உடன் பெண்களுக்கும் இலத்திரனியல் வணிகத்துக்கும் பெருமளவு புதிய மற்றும் விறுவிறுப்பான வாய்ப்புகள் பல கிடைக்கும்" என்றார்.


இலத்திரனியல் வணிக சூழலில் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சிறு வியாபாரங்களுக்கு அவசியமான அறிவையும், சாதனங்களையும் பெற்றுக் கொள்வதற்கு முக்கியமான களமாகவும் இந்த மாநாடு அமைந்திருந்தது. டிஜிட்டல் சந்தைப்பகுதியில் உறுதியான பிரசன்னத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவோருக்கு பெறுமதி வாய்ந்த உள்ளடக்கங்கள் மற்றும் வளங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் பெறுமதி வாய்ந்த உள்ளடக்கங்கள் மற்றும் வளங்கள் போன்ற பரிபூரண கலந்துரையாடல்களையும் சிறப்பையும் நிகழ்வு வழங்கியிருந்தது. ஆரம்பநிலை நிறுவனங்கள் மற்றும் சிறு வியாபாரங்களுக்கு போட்டிகரமான இலத்திரனியல் வணிக சூழலில் நிலைத்திருப்பதற்கு வலுவூட்டும் வகையில் இந்த வாய்ப்பு மிகவும் முக்கியமானதாக அமைந்திருந்தது.

BigPay பிரதம நிறைவேற்று அதிகாரி சுபின் ராதாகிருஷ்ணன் கருத்துத் தெரிவிக்கையில், "புத்தாக்கமான நிதித்தொழில்நுட்பத்தினூடாக மக்களுக்கு வலுவூட்டுவதனூடாக அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது என்பது BigPay இன் பிரதான நோக்காக அமைந்துள்ளது. தெற்காசிய இலத்திரனியல் வணிக மாநாட்டில் எமது அனுபவங்கள் மற்றும் உள்ளக தகவல்களை பகிர்ந்து கொள்ள முடிந்ததையிட்டு, குறிப்பாக airasia கட்டமைப்புடன் நாம் எவ்வாறு கைகோர்த்துள்ளோம் என்பதை பற்றி பகிர்ந்து கொண்டதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். பிராந்தியத்தில் வணிகத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் நிதித் தொழில்நுட்பங்கள் மற்றும் வாடிக்கையாளர் சூழல்கட்டமைப்புகள் ஆகியவற்றுக்கிடையிலான ஆழமான பங்காண்மைகள் முக்கியத்துவம் வாய்ந்தன என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்றார்.

Daraz குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜார்கே மிக்கெல்சென் கருத்துத் தெரிவிக்கையில், "தெற்காசிய பிராந்தியத்தின் இலத்திரனியல் வணிகத்தின் சிறந்த சிந்தனையாளர்களை ஒன்றுகூட்டியிருந்தமை தொடர்பில் நாம் பெருமை கொள்கின்றோம். இலத்திரனியல் வணிகத்தின் வாய்ப்புகளை மாத்திரம் இந்த மாநாடு வெளிக்கொண்டு வராமல், கைகோர்ப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றையும் காண்பித்திருந்தது" என்றார்.

புதுடெல்லி

# மௌனம் காத்த காதலியை 13 தடவைகள் குத்திய காதலன்




இளம்பெண்ணை 13 முறை கத்தியால் குத்திய இளைஞனை பொதுமக்கள் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த இளம்பெண் அதிஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.

புதுடெல்லி லாடோ சாராய் பகுதியை சேர்ந்த இளம்பெண் பிராக்சி. இவர் கவுரவ் பால் என்ற இளைஞருடன் இரண்டு வருடங்களாக பழகி வந்ததாகக் கூறப்படுகிறது. இது பிராக்சியின் பெற்றோருக்கு தெரிய வரவே அவர்கள் பிராக்சியை கவுரவ் பாலுடன் பழகுவதை விட்டுவிடுமாறு வலியுறுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து கவுரவ் பாலுடன் பேசுவதை பிராக்சி தவிர்த்து வந்துள்ளார்.

பிராக்சியிடம் பலமுறை பேச முயன்றும் அதனை அவர் உதாசீனப்படுத்தியதால் கவுரவ் கோபத்தில் இருந்துள்ளார்.

இந்த நிலையில், தனியார் கம்பெனியில் நடைபெறும் நேர்காணலுக்காக டாக்சியில் பிராக்சி வெள்ளிக்கிழமை (13) ஏறியுள்ளார். அப்போது அவரை வழிமறித்த கவுரவ் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

வாக்குவாதம் முற்றிய நிலையில், தான் மறைத்து வைத்திருந்த கத்தியை கொண்டு பிராக்சியை 13 இடங்களில் சரமாரியாக குத்தியுள்ளார். இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த பொதுமக்கள், அங்கிருந்த தப்ப முயன்ற கவுரவை பிடித்துள்ளதுடன், பிராக்சியை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார், கவுரவை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த பிராக்சிஅபாயக்கட்டத்தைக் கடந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பட்டபகலில் இளம்பெண்ணை இளைஞர் கொலை செய்ய முயன்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சத்தீஸ்கர்



மாவோயிஸ்டுகளுக்கு ஆயுதம் வழங்கிய குற்றச்சாட்டு:

## 24 பேருக்கு 10 ஆண்டு சிறை

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலம் தண்டேவாடா மாவட்டத்தில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் (சிஆர்பிஎஃப்) மீது மாவோயிஸ்டுகள் 2010 ஏப்ரல் 6ஆம் திகதி பாரிய தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில், பொலிஸ் அதிகாரி ஒருவரும் 75 மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினரும் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணையில், பொலிஸார், மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் சிலர் மாவோயிஸ்டுகளுக்கு ஆயுதங்கள் வழங்கியது தெரிய வந்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த இவ்வழக்கில், உத்தர பிரதேச மாநிலம் ராம்பூர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (14) தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்த வழக்கில் தொடர்புடைய 24 பேருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 20 பேர் உத்தர பிரதேசத்தைத் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள், மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மோடியின் பாடல் வெளியீடு




நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு, நாட்டின் கலாசாரம் மற்றும் பன்முகத்தன்மையை எடுத்துரைக்கும் விதமாக பிரபல பொலிவூட் பாடகி த்வனி பனுஷாலி பாடிய 'கார்போ' என்ற பாடல் ஆல்பம் வெளியாகியுள்ளது.

இந்த பாடலுக்கான வரிகளை குஜராத்தி மொழியில் பிரதமர் மோடி எழுதியுள்ளார்.

இந்த பாடலுக்கு தனிஷ்க் பாக்சி இசையமைத்துள்ளார். இந்த பாடல் யூ-டியூப் தளத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

வெளியான சில மணி நேரங்களிலேயே 10 லட்சத்திற்கும் அதிகமான பார்வையாளர்களை 'கார்போ' பாடல் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல்



# காசா எல்லைகள் மூடப்பட்டதாக அறிவிப்பு

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதற்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது. இந்த சண்டையில், பெண்கள், குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

காசா மீது இஸ்ரேல் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த சூழலில், பொதுமக்களை தாக்குதல் நடைபெறும் இடத்தில் இருந்து வெளியேறும்படி இஸ்ரேல் எச்சரித்துள்ளது. தொடர்ந்து, தரைவழி தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டமிட்டு உள்ளது.

இந்த நாட்டிற்குள் செல்ல ஒரே வழி தென் காசாவில் உள்ள ரஃபா கிராஸிங் எனும் பாதை ஆகும், அதனையும் இஸ்ரேல் மூடி விட்டதாகவும், இனிமேல் எகிப்து நாட்டிற்குள் செல்ல வேண்டுமானால் இஸ்ரேல் அனுமதி பெற வேண்டும் என்றும் இஸ்ரேல் இராணுவ செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார்.

இதன் மூலம் எகிப்து நாட்டிற்குள் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும் எகிப்து நாட்டிற்குள் செல்ல வேண்டுமானால் எங்களை தொடர்பு கொண்டுதான் செல்ல வேண்டும் என்றும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.



உலகக் கிண்ணம்:

# பாகிஸ்தானை வீழ்த்திய இந்தியா

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தான்னுடனான போட்டியில் இந்தியா வென்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

பாகிஸ்தான்: 191/10 (42.5 ஓவ.) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 50 (58), மொஹமட் றிஸ்வான் 49 (69), இமாம்-உல்-ஹக் 36 (38) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜஸ்பிரிட் பும்ரா 2/19, குல்தீப் யாதவ் 2/35, ஹர்டிக் பாண்டியா 2/34, இரவீந்திர ஜடேஜா 2/38, மொஹமட் சிராஜ் 2/50)

இந்தியா: 192/3 (30.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 86 (63), ஷ்ரேயாஸ் ஐயர் ஆ.இ 53 (62) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 2/36, ஹஸன் அலி 1/34)

போட்டியின் நாயகன்: ஜஸ்பிரிட் பும்ரா



## இந்தியாவில் 2036 ஒலிம்பிக்?

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் நடத்துவதில் இந்தியா ஆர்வமாயுள்ளதாக அந்நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஒருபோதும் ஒலிம்பிக்கை இந்தியா நடத்தியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடாத்த மெக்ஸிக்கோவும், இந்தோனேஷியாவும் இதுவரையில் உத்தியோகபூர்வமாக விருப்பத்தை தெரிவித்துள்ளதுடன், கடந்த மாதம் தமது நாடும் ஒலிம்பிக்கை நடத்தும் நம்பிக்கையுடன் இருப்பதாக போலந்து ஜனாதிபதி அன்ட்ரேஸ்ஜ் டுடா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## உலகக் கிண்ணத்திலிருந்து ஷானக வெளியேற்றம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து இலங்கை அணித்தலைவர் தசுன் ஷானக வெளியேற்றப்பட்டுள்ளார். பாகிஸ்தானுக்கெதிரான போட்டியில் தொடைப் பகுதியில் உபாதைக்குள்ளானதைத் தொடர்ந்தே தொடரிலிருந்து ஷானக வெளியேற்றப்பட்டுள்ளார்.

ஷானக குணமடைய மூன்று வாரங்கள் தேவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஷானகவை இலங்கையின் உலகக் கிண்ணக் குழாமில் சாமிக கருணாரத்ன பிரதியிட்டுள்ளார்.

இந்நிலையில், இலங்கையணிக்கு குசல் மெண்டிஸ் அணித்தலைவராகச் செயற்படவுள்ளார்.



இந்தியாவுக்கு எதிரான போட்டியில்

## ஷகிப் விளையாடுவது சந்தேகம்?

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், இந்தியாவுகு எதிரான போட்டியில் பங்களாதேஷின் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன் விளையாடுவது சந்தேகத்துக்கிடமானதாகக் காணப்படுகின்றது.

நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் தனது இடது தொடைப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே எதிர்வரும் வியாழக்கிழமை (19) நடைபெறவுள்ள இப்போட்டியில் ஷகிப் விளையாடுவது சந்தேகத்துக்கிடமானதாகக் காணப்படுகிறது.

எவ்வாறாயினும் ஷகிப்பின் உபாதையானது எந்தளவுக்கு மோசமானதென பங்களாதேஷ் வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## வில்லியம்ஸனுக்கு பெருவிரல் முறிவு

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், பங்களாதேஷுக்கெதிரான போட்டியில் நியூசிலாந்தின் அணித்தலைவர் கேன் வில்லியம்ஸனுக்கு பெருவிரலில் முறிவு ஏற்பட்டுள்ளது.

முழங்கால் காயமொன்று காரணமாக ஏழு மாதமாக போட்டிகளில் பங்கேற்றிருக்காத வில்லியம்ஸன், இப்போட்டியிலேயே முதலாவதாகப் பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில், மேலதிக வீரராக டொம் பிளென்டலை நியூசிலாந்து இணைத்துக் கொண்டுள்ளது.

எனினும் உத்தியோகபூர்வமாக குழாமில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

அந்தவகையில் வில்லியம்ஸன் குணமடைவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் வழங்குவதாக நியூசிலாந்தின் பயிற்சியாளர் கரி ஸ்டெட் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 16 ஒக்டோபர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.